**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவொற்றியூர்</u>**

**<u>O.S.No.42 / 2021</u>**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திரு.விஸ்வநாதன், உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்கு மூலம் 1873 ஆம் ஆண்டு 10-வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2024 ஆண்டு மார்ச் மாதம் 07-ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி** - 07.**03.2024**

**பெயர்** - **ராஜலட்சுமி**

**க/பெ** - **கோபி**

**சாட்சி** - **PW1**

**விசாரணை தொடங்கும் நேரம்- 12.25 PM**
**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி-</u>**

7. வா.சா.ஆ5 என்ன ஆவணம் என்றால் புது மின் சேவைக்காக நான் தாக்கல் செய்த நீதிப்பேராணை மனுவின் உத்தரவு. இவ்வழக்கின் வழக்குரையில் ஏற்கனவே இருந்த மின் சேவையில் அதிக கட்டணம் வருவதால் புது மின் சேவை வாங்குவதற்காக ரிட் மனு தாக்கல் செய்ததாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ6 என்ன ஆவணம் என்றால் அதே நீதிப்பேராணை மனு சம்மந்தமான உத்தரவு தான். வா.சா.ஆ7 என்ன ஆவணம் என்றால் எங்கள் வீட்டிற்கு கேமிரா கொடுக்க சொல்லி உத்தவு கோரி வழக்கு தாக்கல் செய்தேன். வா.சா.ஆ8 என்ன ஆவணம் என்றால் மேற்படி குற்றவியல் மனுவில் இடைக்கால மனு தாக்கல் செய்ததற்கான ஆவணம்.

8. வா.சா.ஆ 5முதல் 8 வரையிலான ஆவணங்களை இவ்வழக்கு தாக்கல் செய்வதற்காக சான்றாவணங்கள் உருவாக்குவதற்கு மேற்படி வழக்குகளை தாக்கல் தயார் செய்தேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ9 என்ன ஆவணம் என்றால் சி.எஸ்.ஆர் மனு ரசீது மேற்படி சி.எஸ்.ஆர் எதற்கு கொடுக்கப்பட்டது என்றால் என்னை அசிங்கமாக பேசி சண்டையிட்டதால் புகார் கொடுத்தேன் அதற்கு சி.எஸ்.ஆர் கொடுக்கப்பட்டது மேற்படி சி.எஸ்.ஆர் மீது போலிசார் என்ன நடவடிக்கை

எடுத்தார்கள் என்றால் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. யார் மீது மேற்படி புகார் கொடுத்தேன் என்றால் முனுசாமி, இமயவரம்ன், காளியம்மாள் மீது கொடுத்தேன் நான் பொய் புகார் கொடுத்ததால் தான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

9. வா.சா.ஆ 17 என்ன ஆவணம் என்றால் முதல் தகவல் அறிக்கை ஆகும் யார் மீது அது போடப்பட்டது என்றால் எனது வீட்டின் மீது போடப்பட்டது. எதற்காக முதல் தகவல் அறிக்கை போடப்பட்டது என்றால் எனது அம்மா, மாமா மற்றும் தம்பி எனனுடன் தொடர்ந்து பிரச்சனை செய்ததால் போடப்பட்டது. மேற்படி முதல் தகவல் அறிக்கை பொய் புகாரின் மீது போடப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள அனைத்து ஆவணங்களும் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது வழக்கிற்கு சம்மந்தம் இல்லாதது என்றும் கூறினால் சரியல்ல. நான் இந்த வழக்கினை எந்த அடிப்படையில் தாக்கல் செய்தேன் என்றும் வீட்டின் மீது உரிமை கோருகிறேனா அல்லது வீடு கட்டியதாக கூறுவதால் அதன் அடிப்படையில் தாக்கல் செய்தேனா என்றால் வீட்டின் வெளி கேட்டினை மூடுகிறார்கள் மற்றும் கழிவரையை பூட்டி வைத்து இடையூறு செய்கிறார்கள் அதனால் தாக்கல் செய்தேன். மேலும் திருமணம் ஆன நாள் முதல் அந்த வீட்டிற்காக நான் செலவு செய்துள்ளேன்.

10. நான் செலவு செய்ததற்கு ஆவணங்கள் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை . நான் கர்ப்பமாக இருந்தபோது என் மீது இரக்கம் கொண்டு எனது தாயார் என்னை அந்த வீட்டில் அனுமதித்தார் என்றால் சரியல்ல. எனது தாயார் மனஅழுத்தத்திற்கு சிகிச்சை எடுத்து வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. எப்பொழுதும் நான் தான் எனது அம்மா,மாமா மற்றும் தம்பியை அடித்துள்ளேன் என்றும் பிறகு பொய்யான புகார்கள் கொடுத்துள்ளேன் என்றும் கூறினால் சரியல்ல. நான் ஒருமுறை என்னை அவர்கள் அடித்ததாக கூறி மருத்துவமனையில் இருந்ததாக தெரிவித்துள்ளேன் என்றும் அதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை சி.எஸ்ஆர் மட்டும் தாக்கல் செய்துள்ளேன் நான் பொய்யாக கூறுவதால் தான் ஆவணம் என்னிடம் எதுவும் இல்லை என்றும் அதனால் தான் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றும் கூறினால் சரியல்ல. நீதிமன்றம் கேட்டால் தாக்கல் செய்கிறேன்.

11. எனக்கு வழக்கு சொத்தில் பாகம் இருப்பின் நான் பாகப்பிரிவினை வழக்கு தான் தாக்கல் செய்திருக்க வேணடும் என்றும் பிரதிவாதிகளுக்கு தொல்லை கொடுகப்பதற்காக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும் கூறினால் சரியல்ல பாகம் எதுவும் எனக்கு இல்லை. நான் அங்கு வீடு கட்டியுள்ளேன். எனது தாயா் எனக்கு இரக்கப்பட்டு கொடுத்தஇடத்தில் நான் வீடு கட்டடியதாக கூறிகிறேன் என்றால் சரியல்ல தாத்தா உத்தரவின் பேரில் அவா் இறந்த பிறகு அந்த இடத்தை எனக்கு கொடுத்தார்கள். அதற்கு ஆவணம்் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனக்கு வழக்கு சொத்தில் பங்கு இல்லை என்றும் நான் வீடு கட்டியதாக கூறுவதும் பொய் என்றும் முகாந்திரம் இல்லாமல் தாக்கல் செய்யப்பட்ட இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும் கூறினால் சரியல்ல.

12. பிரதிவாதிகளுக்கு தொல்லை கொடுத்து இடத்தை அபகரிக்க பொய்யாக வாதங்கள் மற்றும் ஆவணங்கள் சமா்ப்பித்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு உடனடியாக தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**விசாரணை முடியும் நேரம் : 1.00 P.M**